SOP.No.142/2025

**PW.1** வித்தியா வெங்கடாச்சலம்

08-04-2026 ஆம் தேதி அன்று சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**குறுக்கு விசாரணை எதிர்மனுதாரர் தரப்பில்**

எதிர்மனுதாரர் வங்கியில் 9 வைப்பீடுகள் உள்ளன. அந்த வைப்பீடுகளில் நாமினி பெயர்கள் இல்லையென்பதால் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன். மேற்சொன்ன 9 வைப்பீடுகளும் எனது கணவர் வெங்கடாச்சலம் பெயரில் உள்ளது. மேற்சொன்ன வைப்பீடுகள் 30 வருடங்களுக்கு முன்பாக வைக்கப்பட்டது, தேதி நினைவில்லை. அந்த வைப்பீடுகளை பற்றி எனது கணவர் என்னிடம் கூறியுள்ளார். குறிப்பாக எதிர்மனுதாரர் வங்கியில் இத்தனை வைப்பீடுகள் வைக்கப்பட்டுள்ளன என்று எனது கணவர் என்னிடம் கூறினாரா என்றால், கூறினார். எனக்கும், எனது கணவருக்கும் 02-02-1976 அன்று திருமணம் நடைபெற்றது. திருமணம் சம்மந்தமான ஆவணங்கள் எதையும் நீதிமன்றத்தில் நான் சமர்ப்பிக்கவில்லை. எனக்கு இரண்டு குழந்தைகள். அவர்கள் பெயர்கள் விவேக் வெங்கடாச்சலம், ஹம்சா வெங்கடாச்சலம் ஆகும். 18-01-1977 ல் எனது மகள் ஹம்சா பிறந்தார். 30-06-1984 ல் எனது மகன் விவேக் பிறந்தார். எனது இரு குழந்தைகளுக்கும் திருமணம் ஆகி விட்டது. எனது கணவர் எனது இரு குழந்தைகளின் திருமணத்திற்கு பின்னர்தான் காலமானார். 26-07-2024 ல் எனது கணவர் காலமானார். எனது இரு குழந்தைகளின் பிறப்பு

சான்றிதழ்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ம.த.சா.ஆ.10 முதல் 18 ஆவணங்களில் 30-10-2024 என்று தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். அன்றைய தேதியில் எனது கணவர் உயிரோடு இல்லையென்று சொன்னால் சரிதான். எனது இரண்டு குழந்தைகளும் வெவ்வேறு நாடுகளில் வெளிநாட்டில் வசிக்கிறார்கள். எனது இரு குழந்தைகளும் இந்த மனுவில் 2 மற்றும் 3 வது மனுதாரர்களாக இருக்கிறார்கள். ம.த.சா.ஆ.2 ஏற்படுத்தப்பட்ட அன்று எனது மகள் இந்தியாவில்தான் இருந்தார். ம.த.சா.ஆ.2 ல் சாட்சிகள் கையொப்பம் செய்யாததால் ம.தா.சா.ஆ.2 சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல.

ம.த.சா.ஆ.3 ஏற்படுத்தப்பட்ட அன்று எனது மகன் இந்தியாவில்தான் இருந்தார். ம.த.சா.ஆ.3 ல் சாட்சிகள் கையொப்பம் செய்யாததால் ம.தா.சா.ஆ.3 சட்டப்படி செல்லாது என்று சொன்னால் சரியல்ல. ம.த.சா.ஆ.6 மற்றும் ம.த.சா.ஆ.9 ஆவணங்களுக்கு ஆதரவாக 65 பி சான்றிதழ் இல்லையென்பதால் அந்த இரு ஆவணங்களும் செல்லத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. ம.த.சா.ஆ.19 மற்றும் 20 ஆவணங்கள் அசல் மனுவிற்கு சம்மந்தமில்லாதது என்றும், அதனால் அவைகள் இரண்டும் ஏற்று கொள்ளத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. எனது கணவர் இறந்த பிறகு வாரிசு சான்றிதழ் நான் பெற்றேனா என்றால், நான் இதுவரை மனு தாக்கல் செய்து பெறவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 9 ல் வாரிசு சான்றிதழ் தாசில்தார் வழங்குவது பற்றி நான் குறிப்பிட்டுள்ளது

தவறு என்று சொன்னால் சரியல்ல. எனது கணவரின் பெயரில் இருந்த அசையும் சொத்துக்களை எனது பெயருக்கு மாற்றியது சம்மந்தமான ஆவணங்களை இந்த மனுவில் நான் தாக்கல் செய்யவில்லை. முறையான ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் எனது அசல் மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை** இல்லை

sd/ வித்தியா வெங்கடாச்சலம்,

Taken down by me in open Court read over / interpreted to the witness and acknowledged by him / her to be correct.

Sd/G.Vijaya,
Principal District Judge,
Coimbatore.